அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை

அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி

# ஆன்மீக
# தியான யாத்திரை

## சென்னை - டெல்லி - ஹரித்துவார் - ரிஷிகேஷ் - மதுரா - பிருந்தாவன் - டெல்லி - சென்னை

- புனித ஸ்தலங்களில் சாதுக்களின் தரிசனம் & சத்சங்கம்
- புனித கங்கையில் நீராடல்
- இமயமலையில் உள்ள குகைகளில் தியானம்
- தினசரி யோகா, பிராணாயாமம்
- திருஅருட்பா பாராயணம்

போன்ற ஆன்மீக நிகழ்வுகளில் கலந்து கொள்ள ஓர் அரிய வாய்ப்பு

நாள்: ஜுலை 21 முதல் 26 வரை (6 நாட்கள்)

புறப்படும் இடம் சென்னை விமான நிலையம்

6 நாட்கள் தங்குமிடம், உணவு, பேருந்து, AC இரயில், விமானத்தில் சென்றுவர (சென்னை-டெல்லி-சென்னை) இவை அனைத்திற்கும் சேர்த்து ரூ. 20,000 மட்டுமே!!

இந்தப் பயணம் ஒரு பொழுதுபோக்கு பயணம் அல்ல. இதுவொரு ஆன்மீக புனிதப் பயணம்! குறைந்த இடங்களே உள்ளது.

தொடர்புக்கு: 99427 76351 Email: vallalartrust@gmail.com

முன்பணம் ரூ.13,000 செலுத்தி முன்பதிவு செய்து தங்கள் வருகையை உறுதி செய்துகொள்ளவும்.

அன்பு உள்ளங்களே! நாம் இப்பூவுலகில் ஆனந்தமாக வாழ்வதற்கே பிறந்திருக்கின்றோம். அதற்கு நம் உடல், மனம், உயிர் இம்மூன்றும் ஆரோக்கியமாக இருக்க வேண்டும். இந்த மூன்றும் ஆரோக்கியமாக இருப்பதற்கு பஞ்ச பூதங்களினின்று நமக்குக் கிடைக்கும் சக்திகள் நம் உடலில் சரியான விகிதத்தில் நிறைந்திருக்க வேண்டும்.

இவைகளில் எதுவொன்று குறைந்தாலும் அதற்கு ஏற்பவே உடல் அல்லது மனதில் துன்பங்கள் வரும். இவைகளை சரிசெய்து கொள்வதற்கு பஞ்ச பூதங்களிலிருந்து சக்தியைப் பெறும் முறையை நாம் கற்றுக்கொள்ள வேண்டும். இருந்த இடத்திலிருந்தே இச்சக்திகளைப் பெற்றுக்கொள்ளும் இயற்கை இரகசியங்களை நம் வள்ளல் பெருமானார் கண்டு கொண்டார்கள். அதன் மூலம் எல்லாச் சக்திகளையும் பெற்றார்கள். அதற்கு சில ஒழுக்க நெறிமுறைகளை மேற்கொண்டார்கள். வெற்றியும் பெற்றார்கள். உலகம் தழைக்க வந்துதித்த நம் வள்ளல் பெருமான் கண்ட இவ்வொழுக்க நெறிமுறைகளை எல்லா மக்களுக்கும் அறிவிக்கும் வண்ணம் வடிவமைக்கப்பட்டதே **“ஆழ்நிலை தியான முகாம்”**

## பயிற்சியில் கலந்துகொள்ளும் அன்பர்கள் கவனத்திற்கு

1) பயிற்சியில் கலந்துகொள்வோர் ஆகஸ்டு 13ம் தேதி வியாழன் இரவிற்குள் வந்துவிட வேண்டும்.

2) 17 வயதிற்கு மேல் உள்ள ஆண், பெண் இருபாலரும் கலந்து கொள்ளலாம். குழந்தைகள் அனுமதியில்லை.

3) டார்ச் லைட், குறிப்பு எடுக்க நோட்டு, பேனா அவசியம் கொண்டு வரவும்.

4) யோகாசனம் செய்வதற்கும் படுப்பதற்கும் 2 பெட்ஷீட் ஆண்கள்: T.ஷர்ட், ஷார்ட்ஸ் மற்றும் பெண்கள்: சுடிதார் போன்றவை அவசியம் எடுத்து வரவும்.

5) பயிற்சியில் மூன்று நாட்கள் முழுவதும் கலந்துகொள்ள வேண்டும். ஆகஸ்டு 16 மாலை 5 மணிக்கு முகாம் முடிந்துவிடும்.

<u>பஸ் ரூட்:</u> பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை ஆகிய ஊர்களிலிருந்து பஸ் வசதி உள்ளது.

உடுமலையிலிருந்து 28, 34 ஆகிய எண்ணுடைய பேருந்துகளின் மூலம் அர்த்தநாரிப்பாளையம் வரலாம். (கடைசி பஸ் இரவு 8.30க்கு)

பொள்ளாச்சியிலிருந்து 16, 27, 58 ஆகிய எண்ணுடைய பேருந்துகளின் மூலமும் அர்த்தநாரிப்பாளையம் வரலாம். (கடைசி பஸ் இரவு 9.30க்கு)

*திருச்சிற்றம்பலம்*



# திருச்செவிக்கு விண்ணப்பம்

அருட்பெருஞ்ஜோதித் தனித்தலைமைக் கடவுளே! யாவராலும் பிரித்தற்கு ஒருவாற்றானுங் கூடாத பாசமென்னு மகாந்தகாரத்தில் யானதுவென்னும் பேதந் தோன்றாது அருகிக் கலந்து அளவிறந்த காலம் முன்பின் என்பதின்றி மூர்ச்சித்துக் கிடந்த என்னை அம்மகாந்தகாரத்தினின்றும் ஓர் கணப்பொழுதினுள் அதிகாரணக் கிரியையால் அதிகாரணப் பகுதியுருவிற் பிரித்தெடுத்தருளிய தேவரீரது திருவருட் பேராற்றலை என்னென்று கருதி என்னென்று துதிப்பேன்.

சத்திய ஞானானந்தத் தனித் தலைமைக் கடவுளே! காரணக்கிரியையாற் காரணப் பகுதியுருவினும், அதிசூக்குமக் கிரியையால் அதிசூக்குமப் பகுதியுருவினும், சூக்குமக் கிரியையாற் சூக்குமப் பகுதியுருவினும், பரத்துவ சத்தி சத்தரால் பூதவுருவினும்,அபரத்துவ சத்தி சத்தரால் பவுதிக வடிவினும் ஓர் கணப்போதினுள் என்னைச் செலுத்தாமற் செலுத்திய தேவரீரது திருவருட் பேராற்றலை என்னென்று கருதி என்னென்று துதிப்பேன்.

அகண்ட பூரணானந்தராகிய அருட்பெருஞ்ஜோதிக் கடவுளே! ஜீவனை ஆதரிப்பிக்கும் பூதப் பிருதிவித் தோற்றமும், ஜீவனை விருத்தி செய்விக்கும் பூத நீர்த் தோற்றமும், ஜீவனை விளக்கம் செய்விக்கும் பூதாக்கினித் தோற்றமும், ஜீவனை அதிகரிப்பிக்கும் பூதவாயுத் தோற்றமும், ஜீவனை வியாபகம் செய்விக்கும் பூதவெளித் தோற்றமும்; உபப்பிருதிவி, உபநீர், உபாக்கினி, உபவாயு முதலிய தோற்றங்களும், அவைகளிருக்கும் இடங்களும் தொழிலிடம் முதலிய இடங்களும், ஒலியறிவு, உருஅறிவு, சுவை அறிவு, நாற்ற அறிவு, பரிச அறிவு என்னும் ஐவகைக் குண அறிவுகளும், அவைகள் இருத்தற்குரிய செவி, கண், நாக்கு, மூக்கு, மெய் என்னும் உள்ளிடப் பொறிகளும், அவைகள் உத்தியோகித்தற்குரிய வெளியிடப் பொறிகளும்; வசனித்தறிதல், நடந்தறிதல், கொடுத்தெடுத்தறிதல், மலம் விடுத்தறிதல், சலம் விடுத்தறிதல் என்னும் ஐவகைத் தொழிலறிவுகளும், அவைகள் இருத்தற்குரிய வாக்கு, பாதம், கை, நீர்வாயில், அபானவாயில் என்னும் கரும உள்ளிடப் பொறிகளும், அவைகள் தொழிற்படற்குரிய கருமப் புறவிடப் பொறிகளும்; நினைத்தல், விசாரித்தல், நிச்சயித்தல், அகங்கரித்தல் என்னும் சூக்குமக் கரணத் தொழில்களும், அவைகளை இயற்றும் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் சூக்கும கரணங்களும் இப்பவுதிக வடிவின்கண் ஒருங்கே உண்ணின்று தோன்ற உண்ணின்று தோற்றாது தோற்றுவித்த தேவரீரது திருவருட் பேராற்றலை எங்ஙனம் அறிந்து எவ்வாறு கருதி என்னென்று துதிப்பேன்!

திருச்சிற்றம்பலம்

# பூஜியம் - பூஜகர் - பூஜை

கோவை சிவப்பிரகாச சுவாமிகளின் சொற்பொழிவிலிருந்து...

பூஜியம் என்பது எல்லோருக்கும் தெரிந்த கணிதக் குறி. இந்தப் பூஜியத்தை முதன்முதலில் கண்டுபிடித்து உலகிற்கு வழங்கியவர் நம் நாட்டு ஞானி ஆரியபட்டர்தான். பூஜியம் என்பது ஒரு முழு வட்டம். முழு வட்டத்தில் ஏதாவது ஒரு இடத்தில் இரண்டு முனைகள் சந்தித்து இருக்கும். ஆனால் எந்த இடத்தில் சந்தித்துள்ளது எனத் தெரியாது. இந்த முழு வட்டம்தான் இறைவன். இதில் ஒருமுனை சிவமாகிய இறைவன் மறுமுனை அருட்சக்தி. இறைவனும் அருட்சக்தியும் மலரும் மணமும் போல இரண்டரக் கலந்துள்ளார்கள். இந்த பிரிக்க முடியாத நிலையை "அபின்ன காளி தானாடை" என்பார் அருணகிரிநாதர்.

முழுவட்டமான பூஜியம் இறைவனைத்தான் குறிக்கும். அவர் ஒருவர்தான் முழுவடிவம். இந்த பூரண வடிவமான இறைவனை பூஜை செய்பவர்களைப் பூஜகர் என்ற சொல்லால் குறிப்பிடுகின்றோம். இறைவன் பூஜியர்; அந்த பூஜியரைப் பூசை செய்கின்ற அன்பர் பூஜகர்.

இறைவனாகிய பூஜியத்தை பூஜை செய்வதால் என்ன பலன்?

உலகத்தில் உள்ள எல்லா ஜீவர்களும் இருவினைக்கு ஏற்பத்தான் பிறவி எடுக்கின்றன. அதில் மனித இனம் மட்டுமே வினையை வென்று வீடுபேறு அடைய முடியும்.

தீவினையின் பயன் துன்பம். துன்பம் வந்துற்றபோது துவண்டு விழுதல் இயல்பு. நல்வினையின் பயன் இன்பம். இன்பம் வந்தபோது துள்ளிக் குதித்தல் இயல்பு. இது பொது நியதி. இதை மாற்ற வேண்டும். துன்பம் வந்தால் வருந்தாமலும், இன்பம் வந்தால் மகிழாமலும் இருந்து பழக வேண்டும். இதுதான் மிக உயர்ந்த நிலை.

ஆனால் மாயை நம்மீது சர்வாதிகாரம் நிகழ்த்தும் வரை இந்தச் சமநிலை வராது. இந்த சமநிலை வருவதற்கே இறைவனை பூஜை செய்யும் முறையை நம் ஞானிகள் நமக்கு தந்தருளியுள்ளனர்.

திருப்புகலூரில் திருநாவுக்கரசர் உழவாரப்பணி செய்தபோது அவர் உழவாரம் வைத்துக் கிளறிய இடமெல்லாம் நவரத்தின மணிகளும், மாணிக்கப் பரல்களும் தோன்றி மின்னின. இதைக் கண்டு நாவரசர் ஆச்சரியம் கொள்ளவில்லை. கூழாங்கற்களையும், பருக்கை கற்களையும் எப்படி அள்ளிக் குப்பையில் போடுவாரோ அம்மாதிரிதான் அதையும் நினைத்து அள்ளி வீசினார். "உம்பர்பிரான் திருமுன்றில் உருள் பருக்கை கற்கள் என நினைத்து எறிந்தார்" எனப் பெரியபுராணம் பேசுகின்றது. இந்த இருவினை ஒப்பு வந்த பிறகுதான் அவர் அவ்வூரிலேயே இறைவனுடன் இரண்டறக் கலந்தார். இந்த நிலைதான் திருநாவுக்கரசர் பூஜியம் ஆன நிலை.

அதாவது இன்பம், துன்பம்; வாழ்வு, தாழ்வு; வறுமை, வளமை; விருப்பு, வெறுப்பு; இரவு, பகல்; வேண்டுதல், வேண்டாமை என்ற மேலே குறிப்பிட்ட இரட்டை ஏதும் இல்லாததால்தான் இறையடியார்களை 'பூஜியஸ்ரீ' என்று அழைப்பார்கள். ஒரு அடியாரை மிக உயர்ந்த சொல்லால் அழைக்க விரும்பினால் பூஜியஸ்ரீ என்றுதான் அழைக்க வேண்டும். இதற்குமேல் உயர்ந்த சொல் வேறு இல்லை. அதனால் பூஜியம் என்பது இறைவனையும் அவர் அடியவர்களையும் குறிக்கும் சொல்.

பூஜியம்தான் எல்லாவற்றிற்கும் மூலம். பூஜிய நிலையில் இருந்தால் உலகம் நம்மை மதிக்கும். அதாவது ஆசைகள் அற்ற நிலையைத்தான் பூஜிய நிலை என்கின்றனர் நம் ஞானிகள்.

நம் வள்ளல் பெருமானார் தாம் இயற்றிய திருவருட்பாவில் "ஆசை விட்டார்க்கே அணிமையாம் பாதம்" என்றும் "பற்றிய பற்று அனைத்தினையும் பற்றற விட்டு அருளம்பலப் பற்றே பற்றுமினோ என்றும் இறவீரே" என்றும் அருளியுள்ளார்கள்.

இதை உணர்த்தும் வண்ணமே நம் பெருமானார் வடலூரில் தைப்பூச தினத்தன்று ஞானசபையில் ஜோதி தரிசனம் காண்பித்தார்கள்.

பலபேர் மாதம்தோறும் வந்து ஜோதியைத் தரிசிக்கின்றார்கள். ஆனால் தைமாதம் வரும் பூசம் மிகவும் சிறப்பு வாய்ந்தது. ஓராண்டிற்கு 13 பூசம். 27 நாட்களுக்கு ஒரு பூசம். பூசம் என்றாலும் பூஜியம் என்றுதான் பொருள். பூஜியத்தை இன்றும் பலபேர் பூசம் என்றே சொல்வார்கள். ஓர் ஆண்டில் 365 நாட்கள். இதில் ஒரே ஒரு நாள் மட்டும்தான் ஒளிநாள். அதாவது இந்த பூமியின்மேல் எந்த இடத்திலும் இருள்படாத நாள். அதுதான் தைப்பூச நன்நாள்.

தைப்பூசத்தன்று காலை 6 மணிக்கு உதயகிரியில் சூரியன் உதயமாகும். அதே நாள் காலை 6 மணிக்கு மேற்கு திசையில் அஸ்தகிரியில் சந்திரன் மறையும்.

அதாவது சூரிய ஒளி இந்த பூமியின் பாதிப் பகுதியிலும், சந்திர ஒளி பூமியின் மறுபாதிப் பகுதியிலும் ஒளியைத் தருவதால் பூமி முழுவதும் ஒளி மயமாக இருக்கும். பூமியின் எந்தப் பகுதியிலும் இருளே இருக்காது. ஒளியால் பூமி நிறைவு பெறும். அதுபோல் இருவினையால் ஏற்படும் இன்ப துன்பகள் அற்று நடுநிலைக்கு வந்தால்தான் நாம் எப்போதும் ஆனந்தமாக வாழமுடியும் என்பதே இதன் பொருள்.

அடுத்து பூசை என்றால் பூனை என்று பெயர். "ஓசை பெற்றுயர் உறு பாற்கடல் உற்று ஒரு பூசை முற்றலும் நக்கு புக்கென" என்பார் கம்பர். பூனைக்கும் பூசத்திற்கும் என்ன தொடர்பு என நீங்கள் நினைக்கலாம்.

பூனை பாலை விரும்பும். அது அதை அருந்தியபின் எங்காவது ஓரிடத்தல் சென்று அமர்ந்து கொண்டு தன் நாக்காலும், முன்னங்கால்களாலும் மாற்றி மாற்றி வாயை ஓயாமல் துடைக்கும்.

பால் குடிப்பது 10 நிமிடம் என்றால் வாயை துடைத்து சுத்தம் செய்ய 20 நிமிடம் ஆகும். புன்புலால் புசிக்கும் ஜீவன்களிலேயே பூனை மட்டும்தான் வாயைச் சுத்தமாக வைத்துக் கொள்ளும். சிங்கம் காட்டு விலங்குகளின் ராஜாதான் என்றாலும் அது வாயைச் சுத்தம் செய்யாது. செத்த பிணத்தை தின்றதால் சில நேரங்களில் சிங்கத்தின் வாயில் புழுக்கள் நெளியும். வாயில் சகிக்க முடியாத நாற்றம் வீசும். அதனால் சிங்கம் சுத்தமான ஜீவன் அல்ல. அது அசிங்கமான ஜீவன். அசிங்கம் என்பதுதான் சிங்கத்தின் இயற்கைப் பெயர். அது தலைக்குறை விகாரத்தினால் சிங்கம் ஆயிற்று. ஆனால் பூனையின் வாய் எப்பொழுதும் சுத்தமாக இருக்கும். துர்நாற்றமே வீசாது. அதனால்தான் பூசை என்று காரணப் பெயரால் அதனை அழைப்பார்கள்.

இவ்விதம் நாமும் உடலாலும், மனதாலும், வாக்காலும் பிற உயிர்களுக்கு தீங்கு செய்யாமலும், சன்மார்க்கப் பெருநெறியைக் கடைபிடித்து வாழ்ந்தால் நாமும் மாசிலாமணியாகலாம். மனிதர்களாகிய நாம் மாமனிதர்களாகலாம்.

ஆக இதனின்று நாம் தெரிந்து கொள்ள வேண்டிய மிகப்பெரிய உண்மை என்னவென்றால் "பூசை செய்தல்" என்றால் "சுத்தம் செய்தல்" என்று பொருள். பொதுவாக நாம் ஆலயங்களுக்குச் சென்று சுவாமிக்கு தண்ணீரையும், பாலையும் ஊற்றி சுத்தம் செய்கிறோமே அதற்காக நம் பெரியோர்கள் ஆலயங்களைக் கட்டவில்லை. நம்மை நாம் தூய்மைப்படுத்திக் கொள்ளவே கட்டியுள்ளார்கள்.

**நாடும் நகரமும் நல்திருக் கோயிலும்**
**தேடித் திரிந்து சிவபெருமான் என்று பாடுமின்**
**பாடிப் பணிமின் பணிந்த பின்**
**கூடிய நெஞ்சத்துக் கோயிலாகக் கொள்வனே. – திருமந்திரம்**

என்று ஆலயங்கள் எழுப்பப்பட்டதன் காரணத்தை நமக்குத் தெளிவாக விளக்குகின்றார்கள்.

அதாவது ஆலயந்தோறும் சென்று இறைவனை மனமுருகப் பாடிப் பணிய வேண்டும். நமது குற்றங்களையெல்லாம் கண்டறிந்து நம்மை நாம் திருத்திக் கொள்ள வேண்டும். "நலம் தீங்கிலும் உன்னை மறந்தறியேன்" என அப்பர் பெருமான் சொல்வதைப் போல் எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் இறை நம்பிக்கையை கைவிடாது நாம் செய்த நல்வினை தீவினையால் வரும் இன்ப துன்பங்களைச் சம பாவனையோடு கண்டு வாழ்ந்தால் மனம் ஒருநிலைப்படும். அப்படிப்பட்ட மனத்திலேதான் இறைவன் கோயிலாகக் கொண்டு வாழ்கிறான் என்ற பேருண்மையை திருமூலர் திருமந்திரம் இங்கே நமக்கு எடுத்துரைக்கின்றது.

நாம் எல்லோருமே ஆலயங்கள் செல்கின்றோம். ஆனால் ஒருவரும் தன்னைத் தூய்மைப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று எண்ணுவதே இல்லை. தன்னை தூய்மைப் படுத்திக் கொள்வதே பூஜை செய்வது.

சரி. இதையே வேறு விதமாகக் காண்போம். பூஜியத்திற்கு ஜீரோ, சைபர், சுன்னம், சூழியம், முட்டை, பூசம், வட்டம், உருண்மை என்ற பல பெயர்கள் உண்டு. இறைவன் பூஜிய வடிவம். பூஜிய வடிவமான இறைவனால் படைக்கபட்ட இவ்வுலகமும் பூஜிய வடிவம். முட்டை என்பது பூஜியத்தைக் குறிக்கும் சொல். அண்டம் என்றாலும் முட்டை என்றுதான் அர்த்தம். உயிர்களின் நால்வகைத் தோற்றத்தில் முட்டையில் இருந்து தோன்றுவனவும் உண்டு. முட்டை என்றாலும் பூஜியம் என்று மேலே கண்டோம். கோழி அடை காத்து குஞ்சு பொறிக்கும். ஆனால் எல்லா முட்டைகளும் குஞ்சு பொறிக்காது. சில முட்டைகள் அழுகிப் போகும். அந்த முட்டைகளை கூழ்முட்டைகள் என்பார்கள். இது எதற்கும் பயன்படாது.

இதைத்தான் கூமுட்டை என்ற உலக வழக்கில் சொல்லுவார்கள். யாரொருவன் யாருக்கும் பயன்படாமல் வாழ்கிறானோ அவனை கூமுட்டை என்று அழைப்பார்க்ள. கூமுட்டை என்றால் வாழ்க்கை முழுவதும் பந்தத்தில் உழன்று துன்பப்படும் ஜீவர்கள். இவர்களால் சமுதாயத்திற்கு எவ்வகையிலும் நன்மை இராது.

யார்யாரெல்லாம் தன்னலமாகவே வாழ்ந்து துன்பத்தில் உழன்று இறந்து போகின்றார்களோ அவர்கள் எல்லாம் கூமுட்டைகள்தான்.

எனவேதான் மனித தேகம் கொண்ட நாம் அனைவரும் நம் வள்ளல் பெருமானாரைப்போல் பூஜிய நிலையை எய்த வேண்டும் என்று சங்கல்பம் செய்து கொள்வோம்.

**தந்தையும் தாயும் குருவும்யான் போற்றும்**
**சாமியும் பூமியும் பொருளும்**
**சொந்தநல் வாழ்வும் நேயமும் துணையும்**
**சுற்றமும் முற்றும்நீ என்றே**
**சிந்தையுற்று இங்கே இருக்கின்றேன் இதுநின்**
**திருவுளம் தெரிந்ததே எந்தாய்**
**நிந்தைசெய் உலகில் யான்உளம் கலங்கல்**
**நீதியோ நின்அருட் கழகோ.**

**- திருஅருட்பா**

திருச்சிற்றம்பலம்

# தெய்வத் தீந்தமிழ்
# திருஅருட்பா



அன்பு உள்ளங்களே!

நமக்கும் மிருகங்களுக்கும் உள்ள வேறுபாடுகளுள் முக்கியமான ஒன்று நமது வாய் என்கின்ற உறுப்பு. அதனால்தான் விலங்குகளை வாயில்லா ஜீவர்கள் என்று கூறுகின்றோம். நமக்கு வாய் கொடுக்கப்பட்டதே இறைவனது அருட்புகழை பேசுவதற்கே. இதைத்தான் நம் பெருமானார் “பெருமைபெறு நினதுபுகழ் பேச வேண்டும் பொய்மை பேசாதிருக்க வேண்டும்” என்று அருளியுள்ளார். திருமூல நாயனார் இந்த தேகத்தை ஆலயமாகக் கருதி “வாய் கோபுர வாசல்” என்று அருளியுள்ளார். வாயாகிய கோபுர வாசலின் வழியாகத்தான் நாம் இறைவனைக் காண செல்ல முடியும் என்பதே இதன் தத்துவார்த்தம். எனவே இறைவன் திருவாய் மலர்ந்தருளி நமக்களித்த இத்திருஅருட்பாக்களைப் பாடி இறைவனடி சரணடைவோமாக!

**வண்ணமிகு பூதவெளி பகுதிவெளி முதலா**
**வகுக்குமடி வெளிகளெலாம் வயங்குவெளி யாகி**
**எண்ணமுறு மாமவுன வெளியாகி அதன்மேல்**
**இசைத்தபர வெளியாகி இயல்உபய வெளியாய்**
**அண்ணுறுசிற் பரவெளியாய்த் தற்பரமாம் வெளியாய்**
**அமர்ந்தபெரு வெளியாகி அருளின்ப வெளியாய்த்**
**திண்ணமுறும் தனிஇயற்கை உண்மைவெளி யான**
**திருச்சிற்றம் பலந்தனிலே தெய்வமொன்றே கண்டீர்.** 1

**கற்றமே லவர்தம் உறவினைக் கருதேன்**
**கலகர்தம் உறவினிற் களித்தேன்**
**உற்றமே தகவோர் உவட்டுற இருந்தேன்**
**உலகியற் போகமே உவந்தேன்**
**செற்றமே விழையும் சிறுநெறி பிடித்தேன்**
**தெய்வம்ஒன் றெனும் அறிவறியேன்**
**குற்றமே உடையேன் அம்பலக்கூத்தன்**
**குறிப்பினக் கென்கட் வேனே.** 2

**மணிக்கதவம் திறவாயோ மறைப்பையெலாம் தவிர்த்தே**
**மாற்றறியாய் பொன்னேநின் வடிவதுகாட் டாயோ**
**கணிக்கறியாப் பெருநிலையில் என்னோடுநீ கலந்தே**
**கரைகடந்த பெரும்போகம் கண்டிடச்செய் யாயோ**
**தணிக்கறியாக் காதல்மிகப் பெருகுகின்ற தரசே**
**தாங்கமுடி யாதினிஎன் தனித்தலைமைப் பதியே**
**திணிக்கலையா தியஎல்லாம் பணிக்கவல்ல சிவமே**
**சித்தசிகா மணியேஎன் திருநடநா யகனே.** 3

# சுத்த சன்மார்க்கம் உணர்த்தும் சாகாக் கல்வி

**சன்மார்க்க சாதனம் 1: ஜீவகாருண்ய ஒழுக்கமே மோட்ச வீட்டின் திறவுகோல்**

திருக்குறளில் சாகாக்கல்வியைப் பற்றி சொல்லப்பட்டிருக்கின்றது. இதைத் தகுந்த ஆசிரியர் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

சாகாக் கல்வியில் வெற்றி அடைவதற்கு மார்க்கம் இரண்டு. அவை தவநெறி, மற்றொன்று ஜீவகாருண்ய நெறி ஆகியவை. தவநெறி என்பது எறும்பு ஊர்ந்து சென்று ஓரிடத்தை அடைவது போன்றது. இந்நெறியில் குறைந்த வேகத்துடன் கூடிய பயணமும் பலவகையான தடைகளும் ஏற்படும். ஆனால் ஜீவகாருண்ய நெறியாகிய தயவு நெறி என்பது பறவை பறந்து சென்று ஓரிடத்தை அடைவதைப் போன்றதாகும். இதில் பயணம் விரைவாகவும் தடைகள் இல்லாமலும் நடைபெறும்.

எனவேதான் நம் வள்ளல் பெருமானார் “ஜீவகாருண்ய ஒழுக்கமே மோட்ச வீட்டின் திறவுகோல்” என்று அருளியுள்ளார்கள்.

ஜீவகாருண்ய ஒழுக்கம் என்பது என்னவெனில்; ஜீவர்களுக்கு ஜீவர்கள் விஷயமாக உண்டாகின்ற ஆன்ம உருக்கத்தைக் கொண்டு தெய்வ வழிபாடு செய்து வாழ்தல் என்று அறியவேண்டும்.

ஆன்ம உருக்கம் எப்போது உண்டாகுமெனில்; ஜீவர்கள் பசி, தாகம், பிணி, இச்சை, எளிமை, பயம், கொலை முதலியவைகளால் துன்பத்தை அனுபவிக்கக் கண்டபோதாயினும், கேட்டபோதாயினும் இவ்வாறு உண்டாகுமென்று அறிந்த போதாயினும் ஆன்ம உருக்கம் உண்டாகுமென்று அறியவேண்டும்.

இந்த ஜீவகாருண்யம் உண்டானால் அன்பு உண்டாகும். அன்பு உண்டானால் அருளுண்டாகும். அருளுண்டானால் சிவானுபவம் உண்டாகும்.

**சன்மார்க்க சாதனம் 2: சாகாக் கல்விக்கு ஏது [அ] துவாரம்**

தூக்கத்தை ஒழித்தால் ஆயுசு விருத்தியாகும். ஒருவன் ஒரு நாளைக்கு இரண்டரை நாழிகை (ஒரு மணிநேரம்) தூங்கப் பழக்கம் செய்வானானால் அவன் ஆயிரம் வருடம் ஜீவித்திருப்பான். எப்போதும் மறப்பில்லாமல் ஆசானுடைய திருவடியை ஞாபகம் செய்து கொண்டிருப்பதே சாகாத கல்விக்கு ஏதுவாம்.

**சன்மார்க்க சாதனம் 3: பரோபகாரம், சத்விசாரம்**

பரோபகாரமென்பது தேகத்தாலும், கரணத்தாலும், இந்திரியத்தாலும், திரவியத்தாலும் ஆன்மாக்களுக்கு உபகரித்தல். திரவியம் நேராத பட்சத்தில் திரிகரண சுத்தியாய் ஆன்மநேய சம்பந்தமான தயா விசாரத்தோடு எல்லாச் ஜீவர்களினது வாட்டத்தைக் குறித்தும் பிரார்த்தித்தல்.

சத்விசாரம் என்பது கடவுளினது புகழையும் ஆன்மாவின் தரத்தையும், நமது சிறுமையையும் கடவுளின் தரத்தையும் இடைவிடாது விசாரித்து நமது குறையெல்லாம் கடவுளின் திருவடியில் விண்ணப்பிப்பது. சிவானுபவமாகிய தேகத்திரயம் பெறுவதற்கு மேற்குறித்த இரண்டு மார்க்கம் தவிர வேறில்லை.

**சன்மார்க்க சாதனம் 4: நம்மை நஷ்டம் செய்வன நான்கு**

தேகத்தை நஷ்டம் செய்வன நான்கு. ஆகாரம், நித்தரை, மைதுனம், பயம், ஆகியன. உடம்பிற்கு பொருந்தும் உணவை பசியின் அளவறிந்து கொள்ள வேண்டும். மாதம் இருமுறை மருவுதல் என்ற நியதியின்படி பொருந்தல் அமைதல் வேண்டும். ஒரு நாளைக்கு இரவு மூன்று மணி நேரம் மட்டுமே உணர்வுடன் மிருதுவாகத் தூங்கிப் பழகுதல் வேண்டும் பகல் முழுதும் அமைதி, பரபரப்பு இன்மை, உள்ளும் புறமும் கடவுள் இருந்து நம்மைக் காப்பாற்றி வருகிறார் என்ற நம்பிக்கை ஆகியவற்றுடன் பகல் முழுதும் செயலாற்றும் பயிற்சி வந்தால் மேற் கூறப்பட்ட உணர்வோடு கூடிய தூக்கமாகிய அறிதுயில் சாத்தியம் ஆகும். இப்பயிற்சியினால் பயமும் அறவே நீங்கும்.

நம் வள்ளல் பெருமானார் இதற்கான சூத்திரத்தை நமக்க அருளியுள்ளார்கள். ஆகாரம் அரை, நித்திரை அரைகால், மைதுனம் வீசம், பயம் பூஜியம்.

**சன்மார்க்க சாதனம் 5:**

கடவுளிடத்தில் அன்பும், ஜீவர்களிடத்தில் தயவும், உலகியலில் வெறுப்பும் நம்மிடம் இருந்தால் கடவுளருள் தாமாகவே நம்மையடையும்.

**சன்மார்க்க சாதனம் 6: சுத்த சன்மார்க்கத்திற்கு உரியவர்கள்**

சுத்த சன்மார்க்கத்திற்கு முக்கிய தடைகளாகிய சமயம், மதம் முதலிய மார்க்கங்களை முற்றும் பற்றறக் கைவிட்டவர்களும், காமக் குரோதம் முதலியவைகள் நேரிட்ட காலத்தில் ஞான அறிவினால் தடுத்துக்கொள்பவரும், கொலை புலை தவிர்த்தவர்களும் ஆகிய இவர்கள்தான் சுத்த சன்மார்க்கத்திற்கு உரியவர்கள் ஆவார்கள். மரணம், பிணி, மூப்பு, பயம், துன்பம் இவை முதலியவைகளைத் தவிர்த்துக் கொள்வார்கள். அதாவது, செயற்கையாகிய குணங்களை நன்முயற்சியால் தடுத்துக் கொள்பவர்களுக்குக் கேவலாதிகார மரணம் நீங்கும். அப்படி இல்லாது இவ்விடம் காத்திருப்பவர்கள் மரணத்தைத் தவிர்த்துக் கொள்ள மாட்டார்கள். அருள் விளங்கும் காலத்தில் அவரவர்கள் பரிபாகத்துக்குத் தக்கதாக இகலோக போகத்தை மட்டும் அனுபவிக்கக்கூடுமேயல்லது பரலோக போகமாகிய ஞானசித்திகளைப் பெறமாட்டார்கள்.

**சன்மார்க்க சாதனம் 7:**

எங்கும் பூரணராகி விளங்குகின்ற ஓர் உண்மைக் கடவுள் உண்டென்றும், அக்கடவுளை உண்மை அன்பால் கருத்தில் கருதி வழிபாடு செய்யின் அக்கடவுள் திருவருள் நமது கருத்தின்கண் வெளிப்பட்டு

விளங்கும் என்றும், அத்திருவருள் விளக்கத்தால் மரணம், பிணி, மூப்பு, பயம், துன்பம் முதலிய அவத்தைகள் எல்லாவற்றையும் தவிர்த்து எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்தும் எவ்வளவும் தடைபடாத பேரின்ப சித்திப் பெருவாழ்வை அடைதல் கூடுமென்றும் அறியவேண்டும்.

**சன்மார்க்க சாதனம் 8:**

நான் எனது என்ற தேகசுதந்திரம், போகசுதந்திரம், ஜீவசுதந்திரம் ஆகிய மூவகைச் சுதந்திரங்களையும் கடவுளுக்கு சர்வ சுதந்திரமாக ஒப்படைத்து நமக்கு எவ்வகைச் சுதந்தரமும் தோற்றாமல் இருக்கும் உணர்வு நிலைத்தால் கடவுள் சுதந்தரம் நம்மிடம் செயல்பட்டு நரை, திரை, பிணி, மூப்பு, மரணம் ஆகியவை நீங்கும்.

**சன்மார்க்க சாதனம் 9:**

சாதனங்கள் ஒன்றும் வேண்டாம். ஏதாவது ஓர் சாதனம் சொல்லக்கேட்டு அதன்படி நடந்தால் சிறு ஒளி உண்டாம். அதைக் கண்டு பல்லிளித்து இறுமாந்து கெட நேரிடும். ஆதலால் காலம் தாழ்த்தாது எல்லா உயிரையும் தன்னுயிரைப் போலப் பார்க்கும் உணர்வை வருவித்துக் கொள்ளுதல் வேண்டும். இதுவே சாதனம். இந்தக்குணம் வந்தவன் எவனோ அவன்தான் இறந்தவரை எழுப்புகின்றவன்; அவனே ஆண்டவனும் ஆவான்.

**சன்மார்க்க சாதனம் 10:**

இந்த தேகத்தில் புருவமத்தியில் நமது ஆன்ம அறிவென்கிற கற்பூரத்தில் கடவுள் அருளென்கிற தீபம் விளங்குவதாகப் பாவித்து பார்த்து அதில் பழகிப் பழகிக் கடவுளிடத்தே உண்மையாகிய அன்பையும், ஜீவர்களிடத்தே உண்மையாகிய காருண்யத்தையும் இடைவிடாமல் வைத்து அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரை ஞாபகம் செய்தல் வேண்டும். “அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி” எனும் மகாமந்திரத்தை அவசியம் ஞாபகம் செய்தல் வேண்டும்.

**சன்மார்க்க சாதனம் 11:**

நினைப்பு மறைப்பு உண்டாவதற்குக் காரணம்: சந்திரன் அக்கினியோடு கூடி சூரியபாகத்தில் உண்டாகும் காற்றினால் அசைக்கப்படும்போது உண்டாகும் நினைப்பு.

சூரியன் அக்கினியோடு கூடி சந்திர பாகத்தில் உண்டாகும் காற்றினால் அசைக்கப்படும்போது உண்டாகின்றது மறைப்பு.

நினைப்பு மறைப்பு என்பதற்குப் பொருள்: நினைப்பென்பது ஜனனம், மன அசைவு, ஒன்றை நினைத்தல், சகலகாலம், மேற்படி தத்துவம் வேறொன்றில் பற்றல், தத்துவத்தின் அசைவாகிய ஆவி மேலேறுதல், மேற்படி ஆவி ஏறின இடத்தில் நில்லாது அக்கிரமித்தல்.

மறைப்பென்பது மரணம், தூக்கம், மனம் ஒன்றைப்பற்றி உடனே மறத்தல், கேவலகாலம், மேற்படி தத்துவத்தின் கூர்மை கீழ்ச்செல்லுதல், பிரக்ஞை இல்லாதிருத்தல், அதனது உஷ்ணம் அதிக்கிரமித்தல், மனம் ஆபாசப்பட்டுச் சூனியமாதல்.

மேற்படி நினைப்பு மறைப்பு அற்று நிரதிசய ஆனந்தமாய் அருள் வடிவமாவதே சுத்த சன்மார்க்க சாதனம்.

**சன்மார்க்க சாதனம் 12:**

விருப்பு என்பது ஒன்றை வேண்டிப் பந்தப்பட்டு பூரண லக்ஷியத்தை விட்டு அதிசயமாகப் பார்த்து நிற்றல். இந்த விருப்பினால் தானும் கெட்டு இதர வஸ்துவும் கெட்டு சாதனமும் தடைப்பட்டுவிடும். ஆதலால் எவ்வகையிலும் விருப்பு என்பது கூடாது.

வெறுப்பு என்பது வேண்டாமை, துவேஷம், இதர வஸ்துவைப் பற்றாதிருத்தல். இந்த வெறுப்பால் இதர வஸ்துவிடத்தில் துவேஷம் தோன்றி ஜீவ உபகாரத்தைத் தடை செய்யும். ஆகையால் வெறுப்பும் கூடாது. மேற்குறித்த இரண்டுமற்று சத்துவமயமாய் நிற்றல் வேண்டும்.

**சன்மார்க்க சாதனம் 13:**

தங்களைப் பார்க்க வேண்டுமானால் என்னைப் பாருங்கள். என்னைப் பார்க்க வேண்டுமானால் தங்களைப் பாருங்கள். தங்களைப் பார்த்தால் என்னைப் பார்ப்பீர்கள். என்னைப் பார்த்தால் தங்களைப் பார்ப்பீர்கள்.

**சன்மார்க்க சாதனம் 14:**


நாம் சாதுக்கள் சங்கம் அடைந்தால் சத்விசாரம் செய்யலாம். இதனால் நாம் இப்போது அனுபவிக்கும் வாழ்வு பொய் என்னும் நித்திய அநித்திய விவேகம் வரும். இந்த விவேக அறிவால் ஈனமான இந்த உலக நாட்டம் நீங்கி சத்தியப் பொருளான அருளை நாடுகின்ற ஞானம் வரும். இதனால் பழக்க வாசனை மாறும். இந்த மாற்றத்தால் பற்றனைத்தும் நீங்கிப்போகும். பற்றற்றல் வந்தபின்னரே இறைவன் திருவடியை நாம் சிக்கெனப் பிடிக்க முடியும். இறைவன் திருவடியை நாம் உறுதியாகப் பற்றிய பின்னரே வள்ளல் என வாழும் அருட்பெருஞ்ஜோதியின் அருள் வெப்பம் நம்மைச் சூழ்ந்து பேரின்ப வெள்ளத்தில் திளைக்க முடியும்.

அன்பு உள்ளங்களே! இவ்விதம் நம் வள்ளல் பெருமான் வகுத்தருளிய சுத்த சன்மார்க்க பெருநெறியைப் பயின்று அதன்படி வாழ்ந்து பிறவிப் பயனை அடைவோமாக!

**மற்றறிவோம் எனச்சிறுது தாழ்த்திருப்பீர் ஆனால்**
**மரணமெனும் பெரும்பாவி வந்திடுமே அந்தோ**
**சற்றும்அதை நும்மாலே தடுக்கமுடியாதே**
**சமரச சன்மார்க்க சங்கத்தவர்கள் அல்லால் அதனை**
**எற்றிநின்று தடுக்கவல்லார் எவ்வுலகில் எவரும்**
**இல்லைகண்டீர் சத்தியம்ஈது என்மொழி கொண்டு உலகீர்**
**பற்றிய பற்று அனைத்தினையும் பற்றறவிட்டு**
**அருளம்பலப் பற்றே பற்றுமினோ என்றும் இறவீரே.**

**– திருஅருட்பா; ஞானசரியை**

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி



நீயேஎன் பிள்ளைஇங்கு நின்பாட்டில் குற்றமொன்றும்
ஆயேம்என் றந்தோ அணிந்துகொண்டான்-நாயேன்செய்
புண்ணிம்இவ் வானிற் புவியின் மிகப்பெரிதால்
எண்ணியஎல் லாம்புரிகின் றேன்.
எண்ணுகின்றேன் எண்ணுதொறென் எண்ணமெலாம் தித்திக்க
நண்ணுகின்ற தென்புகல்வேன் நானிலத்தீர்-உண்ணுகின்ற
உள்ளமுதோ நான்தான் உஞற்றுதவத் தாற்கிடைத்த
தெள்ளமுதோ அம்பலவன் சீர். – திருஅருட்பா


**எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க!**
**வள்ளல் மலரடி வாழ்க! வாழ்க!**

**என்றும் சன்மார்க்கப் பணியில்...**

# ABT LIMITED

Corp. Off: 180, Race Course Road
Coimbatore - 641 018.
Phone: 0422 - 4333666
Fax: 0422 - 4333100

# மூத்தோர் சொல் அமிர்தம்

குரு ஒருவர் வயல்வெளி வழியாக நடந்து வந்து கொண்டிருந்தார். அந்த வயல் வெளியில் விவசாயம் செய்து கொண்டிருந்த விவசாயி ஒருவர் குருவை பார்த்துவிட்டு அவரை வணங்கி நின்றான்.

அப்போது குரு அவனுக்கு ஆசிகூறி "உனக்கு ஏதேனும் சந்தேகம் இருந்தால் கேட்டு தெரிந்துகொள்" என்றவரைப் பார்த்து விவசாயி, "கடவுளை அடைவது எப்படி? அந்த இரகசியத்தை எனக்கு அருளுக" எனக் கேட்டுக் கொண்டான்.

உடனே குரு அவனை ஒருமுறை கூர்ந்து பார்த்துவிட்டு அவன் கையில் இருந்த மோதிரத்தை காட்டி அதைப் பற்றி விசாரித்தார்.

அதற்கு அவன் "இது என் பரம்பரை மோதிரம். என் தந்தை இறக்கும்போது இதை எனக்கு கொடுத்தார். நான் இறந்தபிறகு இது என் மகனுக்கு போய்ச் சேரும்" என்று மிகப் பெருமையாகக் கூறிக் கொண்டான்.

அதைக் கேட்ட குரு அந்த மோதிரத்தைத் தன்னிடம் தருமாறு அந்த விவசாயிடம் கேட்டார்.

குரு கேட்கிறாரே என்று விவசாயியும் மோதிரத்தை கழற்றி கொடுத்தான். மோதிரத்தை வாங்கிய குரு அதைச் சட்டென்று வயல்வெளியில் வீசியெறிந்தார்.

அதைக் கண்ட விவசாயி பதறிப்போய், "சாமி! நீங்க கேட்கறீங்களேன்னு கொடுத்தேன். ஆனால் நீங்க இப்படி பண்ணிட்டீங்களே" என்று வருத்தமுற்றான்.

அதற்கு குரு நிதானமாக, "சரி இப்ப நீ என்ன செய்ய போற" என்று கேட்டார்.

அதற்கு அவன், "என்ன பண்றது சாமி, என்னோட எல்லா வேலையையும் விட்டுட்டு மோதிரத்தை தேடி எடுத்தேயாகனும்" என்றான்.

அப்போது குரு சிறு புன்னகையுடன், "தம்பி! இப்ப உன்னோட கேள்விக்கு பதில் கிடைச்சாச்சு" என்று சொல்லிக்கொண்டே அந்த இடத்தைவிட்டு சென்றார்.

**"கடவுளைக் காண உண்மையாய் விரும்பினால் அழுத கண்ணீர் மாறுமா? ஆகாரத்தில் இச்சை செல்லுமா?"** - வள்ளலார்.

திருச்சிற்றம்பலம்

Owned, Published & Edited by S. Mahendrababu
from Vallalar Sathya Dharmasalai, Mountain Roundway,
Thiruvannamalai Tk. & Dt. - 606 603.
and Printed by J. Radha at Subam Printers
39/1, Kosamada Street, Tiruvannamalai - 606 601.

Advertisement


## மகாமந்திரம்

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி



ஜீவகாருண்ய ஒழுக்கமே கடவுள் வழிபாடு

தர்மசாலை பலர் சகாயத்தினாலேயே நிலைபெற வேண்டுமாதலால், ஜீவதயவுள்ள புண்ணியர்கள், தங்கள் தங்களாற் கூடிய வரையில் பொருள் முதலிய உதவி செய்து அதனால் வரும் லாபத்தை பாகஞ் செய்துகொள்ள வேண்டுமென்பது எங்கள் கோரிக்கை.


வள்ளலார் தீஞ்சுவை நீரோடை தர்ம சாலை, என்ற பெயருக்கு
S/B A/c.No.10895139303, IFSC# :SBIN 0000958; SWIFT:SBIN INBB457
ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, நெய்வேலி கிளை
CT: 9842679999 / 9442327059 , 04142-259143

வாடகை - ரூ666 முதல்! தவணை - ரூ999 முதல்!!

Anti-Virus ( Free )

OS ( Licenced )







பழையது ! தரம் உயர்த்தப்பட்டது !! புதியது !!!
Old Refurbished New

### BeyondexC Network Solutions

பியான்டக்ஸ்சி நெட்வொர்க் சொல்யூசன்ஸ்
#174/321,ஆற்காடு ரோடு, தோஷி கார்டன், அடிதளம்#20,
வடபழனி, சென்னை - 600026.
போன்:+91(44)43069262,9444408804,9840398666
eMail:govee@virtues2goal.com

# அருட்பெருஞ்ஜோதி அகவல் விளக்கம்

**பற்றுகள் எல்லாம் பதிநெறி விளங்க**
**உற்றருள் ஆடல்செய் ஒருதனிப் பொருளே – (அகவல் 919–920)**

பற்று - ஆசை, விருப்பு

பற்றுதல் - பிடித்துக் கொள்ளுதல், ஊன்றிப்பிடித்தல், பற்றுக்கொள்ளுதல்.

அதிக ஆசை, அதிக விருப்பு இறுகப் பற்றிக்கொள்ளச் செய்யும்.

ஒருவகை மருந்துப்பூச்சுக்குப் பற்றுப்போடுதல் என்று பெயர். பூசிய இடத்தில் உடல் தோலை இறுகப்பற்றிக் கொள்ளும். கழுவிச் சுத்தப்படுத்துவதற்குக் கடினமாக இருக்கும்.

பற்றுகள் பலவகை. அகப்பற்று புறப்பற்று என இருவகைப் பற்றுகள் அறநூல்களிலும் அறிவுநூல்களிலும் கூறப்பெறும்.

நான் (யான்) என்பது அகப்பற்று; எனது என்பது புறப்பற்று. நான் என்பது அகங்காரம்; எனது என்பது மமகாரம் (வடசொல்வழக்கு).

**யான் எனது என்னும் செருக்கு அறுப்பான்**
**வானோர்க்கு உயர்ந்த உலகம் புகும். (346)**

என்பது துறவு அதிகாரத்துக் குறட்பா. பல்வேறு பற்றுகளைப் பற்றிக் கொண்டு விடாதவர்களைப் பல்வேறு துன்பங்கள் பற்றிக் கொண்டு விடா என்பார் திருவள்ளுவர்.

**பற்றி விடாஅ இடும்பைகள் பற்றினைப்**
**பற்றி விடாஅ தவர்க்கு. (347)**

என்பதும் துறவு அதிகாரத்துக் குறட்பா.

ஆசையைப் பிறப்பீனும் வித்து என்பார் திருவள்ளுவர். ‘அவா அறுத்தல்’ என்றே ஓர் அதிகாரம் செய்தார்.

**அவாஎன்ப எல்லா உயிர்க்கும்எஞ் ஞான்றும்**
**தவாஅப் பிறப்பீனும் வித்து. (361)**

என்பது அவா அறுத்தல் அதிகாரத்துக்குறட்பா. அவாவைப் பிறப்பு ஈனும் வித்து என்றவர், பற்றறுத்தலைப் பிறப்பறுக்கும் என்கிறார்.

**பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் மற்று**
**நிலையாமை காணப்படும். (349)**

என்பது துறவு அதிகாரத்துக் குறட்பா.

“அவா பிறப்பீனும் வித்து” என்பதும், “பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும்” என்பதும் ஒருசேரவைத்து எண்ணத்தக்கன. பிறப்புக்கு வித்து அவா. பிறப்பறுத்தலுக்கு வித்து அவா அறுத்தல், பற்றறுத்தல்.

“அற்றது பற்றெனில் உற்றது வீடு” என்று நம்மாழ்வார் சுருங்கக் கூறுவார். சூத்திரம் போன்று. (திருவாய்மொழி 2097).

“பற்றுவது பந்தம் அப்பற்றறுத்தல் வீடு, இஃது பரம வேதார்த்தம்” என்று நம் வள்ளற்பெருமான் நம்மாழ்வார் போன்றே சூத்திரம் போன்று சுருங்கக் கூறித் தெளிவுறுத்துவார்.

உயிர்ப்பற்று, உடற்பற்று(தேகப்பற்று), பொருட்பற்று முதலியனவும் இவை சார்ந்த இனப்பற்று, சாதிப்பற்று, சமயப்பற்று, மதப்பற்று ஆகிய பற்றுக்களும் அறவேண்டிய பற்றுகள்.

பற்றறுத்தலில் இல்லறத்தார்க்குரிய வகைவேறு, துறவறத்தார்க்குரிய வகை வேறு, உலகியலார்க்கும் அருளியலார்க்கும் உரிய வகைகள் வெவ்வேறு.

துறவறத்தார்க்குக் குடும்பப்பற்று இருப்பதற்கில்லை. இல்லறத்தார்க்குக் குடும்பப்பற்று வேண்டும்.

இல்லறத்தார்க்கு தாய்மொழிப்பற்று, தாய்நாட்டுப்பற்று இருக்கலாம். அதே சமயம் பிறமொழி வெறுப்பு, பிறநாட்டு வெறுப்பு (துவேஷம்) இருக்கக் கூடாது. தம்சாதி, தம்இனம், தம் சமயம், தம்மதம் என்பதால் பற்றும் (விருப்பும்), பிறசாதி, பிறஇனம், பிறசமயம், பிறமதம் என்பதால் துவேஷமும் (வெறுப்பும்) கூடாது.

நல்லனவற்றில் எல்லாம் பற்றுக் கொள்ள வேண்டும். தீயனவற்றில் எல்லாம் பற்றைத் தவிர்க்க வேண்டும்.

பற்ற வேண்டிய பற்றுகள் அனைத்திலும் கடவுட் பற்று சிறந்தது. அதைப் “பற்றற்றான் பற்று” என்பார் திருவள்ளுவர் பற்றற்றவனாகிய கடவுளின் பற்றைப் பற்றினால் ஏனைய பற்றுகள் அனைத்தும் அற்றுப்போம்.

**பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்**
**பற்றுக பற்று விடற்கு. (350)**

என்பது வள்ளுவர் வாக்கு, துறவு அதிகாரத்துக் குறட்பா. திருவள்ளுவர் முன் மொழியும் இதனை அப்படியே வழி மொழிகிறார் வள்ளற்பெருமான்.

**பற்றற்றான் பற்றினையே பற்றியிடல் வேண்டுமது**
**பற்றற்றால் அன்றிப் பலியாதால் – பற்றற்றல்**

(திருவருட்பா, நெஞ்சறிவுறுத்தல் 624-1965).

என்பது வள்ளற்பெருமான் வாக்கு.

ஆன்மிகப் பாதையில், அருள் நெறியில் செல்வோர் பற்ற வேண்டிய ஒரே பற்று தெய்வப்பற்று, சிவப்பற்று. இனி அகவல் வரிகளுக்கு வருவோம்.

**பற்றுகள் எல்லாம் பதிநெறி விளங்க**
**உற்று அருள் ஆடல்செய் ஒரு தனிப் பொருளே**

பற்றுகள் எல்லாம் - பற்றிச்செல்லும் நெறிகள் எல்லாவற்றிலும்

பதிநெறி - பதியைப் பற்றும் நெறி, பதியால் பற்றப்பெறும் நெறி

விளங்க - சிறந்து விளங்க

உற்று - பொருந்தி

அருள்ஆடல் - அருள் விளையாட்டு

செய் - நிகழ்த்துகின்ற

ஒருதனிப்பொருளே - ஒப்பற்ற தலைமைப் பொருளே.

பதி நெறியில் இருவகை உண்டு. நாம் பதியைப்பற்றும் நெறி ஒன்று. பதியால் நாம் பற்றப்பெறும் நெறி, பதி நம்மைப் பற்றும் நெறி ஒன்று.

பதியை நாம் சென்று அணுகும் நெறி. பதி நம்மை வந்து அணையும் நெறி. முன்னதால் பின்னதைப் பெறலாம்.

பதியைநோக்கி நாம் ஓரடி எடுத்துவைத்தால், பதி நம்மை நோக்கி ஈரடி எடுத்துவைக்கிறது. அவனை நோக்கி நாம் ஏற வேண்டும். ஏறினால் அவன் நம்மை நோக்கி இறங்கி வந்து (இரங்கிவந்து) அருள் செய்வான்.

பற்றுகளெல்லாம் பதிநெறிவிளங்க ஒருதனிப் பொருளே வந்து உற்று அருளாடல் செய்கிறது.

---


## திருமந்திரம் உணர்த்தும்
## அறம் செய்யான் தன்மை

**எட்டி பழுத்த இருங்கனி வீழ்ந்தன**
**ஒட்டிய நல்லறம் செய்யார் – அவர் செல்வம்**
**வட்டிகொண்டு ஈட்டியே மண்ணில் முகந்திடும்**
**வட்டிகொண்டு ஈட்டியே மண்ணில் முகந்திடும்**
**பட்டிப் பதகர் பயன் அறியாரே.**

உயிருடன் ஒட்டிச் செல்லும் நற்பயனைத் தருவதாகிய நல்லறத்தைச் செய்யாதாரின் செல்வம், எட்டி மரத்தில் பழம் பழுத்துக் கீழே விழுந்து கிடந்தாலும் அதை யாரும் உண்ணாமை போன்று பயனற்றதாகும். மேலும் அந்தப் பயனற்ற செல்வத்தை பட்டிமாடு போன்ற பாவிகள் வட்டியிட்டு வாரிக் கொள்வர் என்ற முடிவை அச்செல்வர் அறியார். நல்லோர்க்கு உதவாத செல்வத்தைத் தீயோர் கொள்ளையிட்டுச் செல்வர் என்க.

# உள்ளது உரைத்தல்

ஸ்ரீமுக வருடம், ஐப்பசி மாதம், 7ம் நாள், புதவாரம், பகல் 8 மணிக்கு மேட்டுக்குப்பம் சித்தி வளாகத் திருமாளிகையில் முதன் முதலில் சுத்த சன்மார்க்க கொடி கட்டினவுடனே நடந்த நிகழ்ச்சியின் குறிப்பு.



அந்தப் பசுமை வர்ணம் எப்படிப்பட்ட தென்றால், கருமைக்கு முதல் வர்ணமான பசுமை இருக்கின்றது. இப்படிப்பட்ட அழுத்தமான திரை நீங்க வேண்டுமென ஸ்தோத்திரித்தும், தெய்வத்தை நினைத்தும், நமது குறையை ஊன்றியும் இவ்வண்ணமாக, இருக்கின்றபோதும் படுக்கின்றபோதும் இடைவிடாது இவ்விசாரத்தோடு ஆண்டவர் நமக்குண்மை தெரிவிக்க வேண்டுமென்கின்ற முயற்சியுடனிருந்தால் தெரிய வேண்டியதைத் தெரிந்து கொள்ளலாம்.

அவ்விசாரம் பரம் அபரம் என்று இரண்டு வகையாக யிருக்கின்றது. இவற்றில் பரம் பரலோக விசாரம், அபரம் இகலோக விசாரம், இவ்விரண்டில் இகலோக விசாரம் விசாரமல்ல. சாதாரணமாக ஒருவன் வி–சாரம் செய்து கொண்டிருக்கின்றானே யென்றால், அவ்விசாரம் விசாரமாகாது, உண்மை விசாரமுமல்ல. ஏனெனில்; விசார மென்கின்றதற்குப் பொருள்; வி–சாரம் என்பதில் 'வி' சாதாரண உலக விசாரத்தை மறுக்க வந்தது. அது மேலும் பரலோக விசாரத்தையே குறிக்கும் பொருட்டு வந்தது. ஜலத்திலிருக்கின்ற பாசியை நீக்குவது போல். நமது ஆன்மாவைத் தெரியவொட்டாமல் மூடியிருக்கின்ற பச்சைத் திரையாகிய ராகாதிகளை விசார அதியுஷ்ணத்தாலல்லது, மற்ற உஷ்ணங்கலால் நீக்க முடியாது. அந்த உஷ்ணம் யோகியினுடைய அனுபவத்தில் தெரியும். அதை மனுஷ்ய தரத்தில் உண்டு பண்ணுவதற்குத் தெரியாது. அந்த விசாரத்தைவிட ஆண்டவரை ஸ்தோத்திரம் செய்கின்றதிலும் தெய்வத்தை நினைக்கின்றதிலும் அதிக உஷ்ணம் உண்டாகும்.

# ஆன்மீகம் உணர்த்தும் சமுதாய வாழ்க்கை முறை

ஏவலரைத் தேர்ந்தெடுக்கும் கலையில் தேர்ச்சி பெறாதவரிடம் ஏவலர் கூட்டம் கூட்டமாக இருப்பர். ஆனால் பணிகள் நிகழா. ஏவல் கொள்வோர் எப்போதும் இது நடைபெறவில்லையே; அது நடைபெறவில்லையே என்று அங்கலாய்த்துக் கொள்வார். அடிக்கடி ஏவலரோடு முரண்படுவார். ஏவலர் முணுமுணுப்பர்; ஏவலர்களும் மனிதர்கள் தாமே! அவர்களிடம் குணங்களும் உண்டு; குற்றங்களும் உண்டு. ஏவல் கொள்வோர் ஏவலரிடம் உள்ள குற்றங்களை மறக்கவேண்டும். அவரிடமுள்ள குணங்களைக் கண்டு கொள்ளவேண்டும். அவ்வழி ஏவல் கொள்ள வேண்டும். இஃதொரு செப்பமான வாழ்க்கை முறை.

**குணம் நாடிக் குற்றமும் நாடிஅவற்றுள்**
**மிகைநாடி மிக்க கொளல்**

என்பார் திருவள்ளுவர். ஏவலரைக் தேர்ந்து தெளிந்து ஏற்றுக் கொள்ள வேண்டும். தெளிந்தபின் ஐயப்படுதல் அன்பினைக் கெடுக்கும்; உறவினை உருக்குலைக்கும்; பணிகளைக் கெடுக்கும்; பகையை மூட்டும். ஆதலால், ஏவலரைத் தெளிந்தபின் ஐயம் கொள்ளுதல் கூடவே கூடாது.

**தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்**
**தீரா இடும்பை தரும்.**

## தன் வலிமை அறிக!

மனிதன் தனது வாழ்க்கைப் பயணத்தை இனிதே நிறைவேற்றி முடிக்க வேண்டுமானால் பிறர் வலிமையை ஆய்ந்தறிவதுடன் தன் வலிமையையும் பெருக்கி வளர்த்துக் கொள்ள வேண்டும். வலிமையில்லா வழி, வளம் குன்றும்; புகழ் பெறுதல் அரிது; இறைநிலையையும் எய்துதலரிது; ஆதலால் நாள்தோறும் தம் வலியறிந்து மேலும் மேலும் காலத்தின் தேவைக்குரிய அளவுக்கு வலிமையைப் பெருக்கி வளர்த்துக் கொள்ளவேண்டும். வலிமையில்லா வாழ்க்கை 'நடலை வாழ்க்கை'. வலிமையில்லாதவருக்கு ஏமம் இல்லை; இன்பம் இல்லை. ஆதலின் பெறவேண்டிய வலியறிக. அவ்வலிமையைப் பெற்று உயர்க என்று திருவள்ளுவர் மனிதனை வலியறிதல் என்ற அதிகாரத்தின் மூலம் வழி நடத்துகின்றார்.

## ஊக்கம் உடைமை!

மனிதன் அறிவைப் பெற்றான்; காலத்தினை அறிந்து ஆராயும் இயல்பினைப் பெற்றான்; வலிமையையும் பெற்றிருக்கின்றான். ஆயினும் அவனை உந்திச் செலுத்தி வளர்க்கும் ஊக்கமில்லா வழி, உரிய பயன்வராது.

ஊக்கமென்பது உள்ளத்தின் எழுச்சி. பள்ளம் நோக்கிப் பாய்ந்து வரும் புனல்போலப் பணிகளையே நோக்கி விரையும் உள்ளத்து எழுச்சி; இயல்பான வாய்ப்புகளின்மை குறை யல்ல. வாய்ப்புக்கள் வந்தமைவனவல்ல. மனிதன் படைத்துக் கொள்பவை. வாய்ப்புக்களைப் படைத்து வழங்கும் அறிவறிந்த ஆள்வினை வேண்டும் என்றார் திருவள்ளுவர்.

**பொறியின்மை யார்க்கும் பழியன்று அறிவறிந்(து)**
**ஆள்வினை யின்மை பழி.**

உலகத்தில் எதையிழந்தாலும் திரும்பப் பெறலாம்; ஆனால் ஊக்கத்தை இழந்த மனிதன் எதையும் பெற இயலாது. கடவுளாலே கூட அவனைக் காப்பாற்ற முடியாது. "உள்ளம் உடைமை உடைமை" என்பது வள்ளுவர் வாக்கு. அடுக்கிய உடைமைகளை உடைமையெனக் கொள்ளற்க! உடைமைகளைப் படைத்திடும் ஆற்றலுடைய உள்ளமே உடைமை. உள்ளத்தை இழந்த மனிதன் உயிரை இழந்த உடம்பு போல்வான். ஆதலால் வையகத்தின் வாழ்க்கையை வெற்றிகரமாக முடிக்கக் கருதும் மனிதன் ஊக்கத்தை உடைமையாகக் கொள்ள வேண்டும். அவனே ஊழை வெற்றி கொள்வான். ஊழிற்கு அடிமையாகும் கொள்கை நமது தத்துவத்தில் இல்லை. ஊழை மாற்றத்தானே இந்த வாழ்க்கை வழங்கப்பட்டிருக்கிறது. அதனால் ஊழைக்கண்டு அஞ்சற்க! ஊழின் வலிமை, முயற்சியின் முன் தூள்தூள் ஆகும். ஊழை, ஆள்வினையுடைமை வெற்றி பெறும். ஆதலால் நம்பிக்கையுடன், ஊக்கக் கிளர்ச்சியுடன் வாழ்க்கையை நடத்துக. இதுவே வள்ளுவர் ஆணை!

**ஊழையும் உப்பக்கம் காண்பர்; உலைவின்றித்**
**தாழாது உஞற்று பவர்.**

என்று தேற்றி வழி நடத்துகிறார்; ஊக்கம் தந்திடும் உரைகளைத் தந்துள்ளார். தொடர்ந்து செயற்படுக; துவளாதே; என்கிறார்.

மனிதன் பணிகளைத் தொடங்க வேண்டும். அங்ஙனம் பணிகளைத் தொடங்கிச் செய்வதன் மூலம் அவன் வாழும் உலகத்தை - சூழ்நிலையை இனியதாக அமைத்துக் கொள்கிறான்; அறிவை வளர்த்துக் கொள்கிறான். பணிகளின் வழி அவன் வாழ்தலே அவன் முழுமையெய்துதற்குரிய வழி. அதனாலன்றோ,

**என் கடன் பணிசெய்து கிடப்பதே** என்றார் அப்பரடிகள்.

## இருவினையொப்பு

"பணி செய்து கிடப்பதே" என்ற அருள் வாக்கு எண்ணத் தக்கது. வாழ்வியல் ஒரு விந்தையான அமைப்பு. செயல் செய்வது; அதாவது வினைகளை இயற்றுவது தவிர்க்க முடியாத கடமை. ஆயினும், வினை வழி, இன்பமும் துன்பமும் நச்சு வட்டமாகச் சுழன்று வாராமல் தற்காப்பது அவசியம். அதற்கென்ன வழி? செயல்களைச் செய்ய வெண்டும். ஆனால் அதனுடைய விளைவுகளைப் பலாபலன்களைத் தன் வயப்படுத்திக்

கொள்ளக்கூடாது. தன்னயந்த சார்புணர்வுடன் நல்லதே செய்தாலும் வினை நீக்கத்திற்கு வழியில்லை. "இன்பம் வந்துழி மகிழ்தலும் துன்பம் கண்டுழித்துயறுதலும் கொள்ளற்க; அல்லாக்காலும் அமைந்து அழாதிருக்க! வேண்டுதல் வேண்டாமை என்ற கறங்கு வட்டாரத்தினின்று விலகி வாழ்க்கை விளையாட்டை நிகழ்த்துக. அவ்வழியில் வினை நீங்கும்; துன்பம் நீங்கும்" என்று அறிவுறுத்தியுள்ளார்.

**நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால்**
**அல்லற் படுவது எவன்?** என்பார்.

**எடுத்த பணிகளில் இடையறவு படாமை :**

பணிகளைத் தொடர்ந்து செய்தல் வேண்டும். தொடங்கிய பணிகளை இடையில் நிறுத்துதல் நன்றன்று. அப்பழக்கம், பணிகளின் பயனைக் குறைக்கும்; அது மட்டுமன்று, துன்பத்தையும் தரும். பற்றி எரியும் வீட்டை ஒரு புறம் அணைத்துவிட்டு இன்னொரு புறம் அணைக்காமல் இருப்பதால் யாது பயன்? தீயினால் வீடு அழிந்துவிடும். ஒரு புறம் அணைத்தன் முயற்சியும் பயனற்றுப் போகிறது. ஆதலால் பணிகளை இடையில் நிறுத்துதல் நம் வாழ்க்கைக்குரிய வழியன்று. பணிகள் துன்பத்தோடு தொடர்புடையனதாம். இனிய மக்கட் பேற்றுக்குக் கூட, தாய் செங்குருதி சிந்தத்தானே வேண்டி இருக்கிறது. ஆதலால், பணிகளை மேற்கொண்டு வாழ்தல் என்பது மலர்கள் பரப்பப்பட்ட பாதையன்று, ஆயினும் துன்பம் கண்டு துவளாது, சோர்வடையாது இடுக்கண்களின் காரணமாக இடையில் நில்லாது பணிகளைத் தொடர்ந்து செய்தலே வாழ்வாங்கு வாழும் நெறி.


---

## குருவாய்மொழி

1) *தூங்கும்போது வரும் கனவு விழிக்கும் வரை நிஜமாகவே தோன்றுவதுபோல் எல்லா விவகாரங்களும் தத்துவஞானம் வரும்வரை நிஜமாகத்தான் காணப்படும்.*

2) *மிருகங்கள்தான் நன்மையெது தீமையெது என்பதை உணராமல் வாழும். ஆனால் நாம் எல்லோரும் மனிதர்கள். எனவே நன்மை தீமை எதுவென்பதை உணர்ந்து தர்ம வழியில் வாழவேண்டும்.*

3) *ஆசைகளைக் குறைத்துக் கொள்ளும்போதுதான் பிற உயிர்களின் துன்பம் நம் கண்களுக்குத் தெரியும். அப்போதுதான் நமக்குள் ஜீவகாருண்ய சிந்தனை உண்டாகும். இந்த ஜீவகாருண்யத்தின் மூலமாகத்தான் அருட்பெருஞ்ஜோதி இறைவனின் அருளைப் பெறமுடியும். எனவேதான் ஆசைகளைக் குறைத்துக் கொள்ள வேண்டும் என நம் ஞானிகள் கூறுகின்றனர்.*



# பாடலும் பொருளும்

**அலைகடலும் புவிவரையும் அனல்கால் நீரும்**
**அந்தரமும் மற்றையகி லாண்டம் யாவும்**
**நிலைகுலையா வண்ணமருள் வெளியி னூடு**
**நிரை நிரையா நிறுத்தியுயிர் நிகழும் வண்ணந்**
**தலைகுலையாத் தத்துவஞ்செய் திரோதை யென்னுந்**
**தனியாணை நடத்தியருள் தலத்தில் என்றும்**
**மலைவறவீற் றிருந்தருளு மரசே முத்தி**
**வழித்துணையே விழித்துணையுண் மணியாந் தேவே.**

**– மகாதேவ மாலை 41**

எப்போதும் ஓயாத அலை அடித்துக்கொண்டிருக்கும் கடலும் பூமியும் மலையும் தீயும் வீசுகின்ற காற்றும் தண்ணீரும் ஆகாயமும் மற்றுமுள்ள பல கோடி அண்டங்கள் எல்லாம் அவையவை விளங்குகின்ற இடத்தை விட்டு அகலா வண்ணம் தன்னுடைய அருள் நிறைந்த வெளியிலே வரிசை வரிசையாக அவற்றை நிலைநிறுத்தி வைத்துள்ள இறைவன் அத்துடன் நில்லாமல் உயிர்களாகிய ஜீவன்கள் எக்காலத்தும் வாழும் வண்ணம் செய்ய வகை செய்துள்ளது அறிந்ததே. ஜீவன்கள் இன விருத்தி செய்யும் வகை படைக்கப்பட்டுள்ளதால் முதியவை அழிந்தாலும் புதியனவாகத் தோன்றிக் கொண்டே இருத்தலால் ஜீவன்கள் அழியாது விளங்கிக் கொண்டே இருக்கின்றன.

படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில் நடைபெற்றுக் கொண்டே இருத்தலால் ஜீவன்களின் இருப்பும் எப்போதும் இருந்து கொண்டே இருக்கின்றது. ஐந்து மலங்கலாகிய ஆணவம், மாயை, கன்மம், மாமாயை, திரோதை என்பவற்றில் பிறவிக்கான தத்துவத்தை நிகழ்த்துவது திரோதையாகும். ஜீவன்கள் பிறப்பதும் இருந்து மாண்டு பின்னர் பிறப்பதும் திரோதையின் செயல்தான். இதுதான் பிறப்பு இறப்பு என்னும் தத்துவம்.

குலைந்து போகாமல் என்றும் நிலைப் பெற்று, ஜீவன்களின் இருப்பு என்றும் இருக்கும்படிச் செய்கின்ற திரோதை என்கின்ற ஒப்பற்ற ஆட்சியை நடத்துகின்ற இறைவனே. அந்த இறைவன், எங்கே அருள் விளங்குகின்றதோ அந்த இடத்தில் நீங்காத வண்ணம் விளங்குகின்றானாம். எங்கே கருணை இயற்கையில் உள்ளன அங்கே விளங்கிய அருட்பெருஞ்ஜோதி என்று அகவலில் இறைவன் விளங்குமிடத்தை நம் பெருமானார் குறிக்கின்றார். இயற்கையாக எங்கே கருணை அதாவது அருள் விளங்குகின்றதோ அங்கே இறைவன் விளங்குகின்றான். அவனை மலை வற வீற்றிருந்து அருளும் அரசே என்கிறார். கருணையுள்ளம் கொண்டவர் தயை மிகுந்தவர் திகையா வண்ணம் அவர்கள் உள்ளத்திலேயே வீற்றிருந்து அவர்கட்கு அருள் பாலிக்கின்றான். அந்த அருளைத் தருவதற்கு அவன் யாரிடத்திலும் அனுமதி கோரத் தேவையில்லை.

கருணையின் வழி இறைவன் அருள் தருதலால் ஜீவன்கள் தயவு வழி நடந்தே ஆக வேண்டும். பிற ஜீவன்களிடம் காட்டும் இரக்கம், தயவு, கருணை என்ற ஒன்றுதான் இறைவனின் அருளைப் பெற ஒரேவழி. அந்தத் தயவானது ஜீவன்கள் முத்திப்பேறு பெற வழி வகுத்தலால் அந்த ஜீவகாருண்ய வழி இறைவன் வகுத்த வழியாதலால் இறைவன் முக்திக்கு வழித் துணையாகவே விளங்குகின்றான். ஜீவகாருண்யமே முக்திக்கு முதற்படி என்றும் வள்ளலார் கூறியுள்ளது கவனத்தில் கொள்ள வேண்டியதாகும்.

சிற்சபையாகிய புருவ மத்தியில் மணியாக விளங்கும் இறைவன் நம் வழிக்குத் துணையாக இருந்து நம்மை வழி நடத்துபவனாகவும் விளங்குகின்றான், அவ்வாறு விளங்குகின்ற இறைவனே.

திருச்சிற்றம்பலம்




## விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன



### வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு விளம்பர விபரம்

அன்பர்கள் நமது மாத இதழில் தங்கள் நிறுவனங்கள், கடைகள் தொடர்பான விளம்பரங்களை பிரசுரித்து பயனடையலாம்.

1) முழுபக்க விளம்பரம் - ரூ. 2000

2) அரை பக்க விளம்பரம் - ரூ 1000

3) முன் அட்டை உள் பக்கம் (கலர்) - ரூ 3000

4) பின் அட்டை உள் பக்கம் (கலர்) - ரூ 3000

# தருமம் செய்ய விரும்பும் நெஞ்சங்களுக்கு ஒரு அன்பு வேண்டுகோள்

அன்பர்கள் தங்கள் இல்லங்களில் நடைபெறும் திருமண நாள், பிறந்த நாள் போன்ற தினங்களிலும், இறந்தவர்களின் நினைவு நாள் போன்ற நாட்களிலும் திருவண்ணாமலையில் அமைந்துள்ள நமது வள்ளலார் சத்திய தருமச்சாலையில் அன்னதானம் செய்யலாம். **தங்கள் நன்கொடைக்கு 80G பிரிவின்கீழ் வருமானவரி விலக்கு உண்டு.**

ஒரு நாளுக்கான அன்னதான நன்கொடை

காலை உணவிற்கு - ரூ.1,500/- மதிய உணவிற்கு - ரூ.6,000/-

இரவு உணவிற்கு - ரூ.2,500/-

மாதப்பூச அன்னதானத்திற்கு (மூன்று வேளைக்கும்) - ரூ.12,500/-

பௌர்ணமி சிறப்பு அன்னதானத்திற்கு ரூ.4,000/-


பசு பராமரிப்பிற்கு (ஒரு பசுவிற்கு/ஒரு மாதத்திற்கு) ரூ.2,000/-

அணையா தீபத்திற்கு Oil (5 இடங்களுக்கு) - 15 லிட்டர்

**தங்களது அன்னதான நாட்களை முன்கூட்டியே பதிவுசெய்துகொள்ளவும்**

**Please donate - Cheque / DD In favour of**
**Arutperunjothi Vallalar Charitable Trust, Thiruvannamalai**
**Please donate through HDFC Bank Ltd.,**
**Arutperunjothi Vallalar Charitable Trust, Thiruvannamalai**
**A/c No. : 08761450000048**
**IFSC Code: 0000876**
**Please send MO to:**

அருள்திரு பாபு சாது
சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்
552/6A, வாயுலிங்கம் எதிரில், கிரிவலப்பாதை, கோசாலை கிராமம், அடிஅண்ணாமலை அஞ்சல், திருஅண்ணாமலை - 606 604.




## மாதப்பூச ஜோதி தரிசனம், வடலூர்

வருவார் அழைத்துவாடி வடலூர் வடதிசைக்கே
வந்தால் பெறலாம் நல்ல வரமே - வள்ளலார்.

| | | |
|---|---|---|
| 13-08-2015 வியாழன் மாதப்பூசம் | 09-09-2015 புதன் மாதப்பூசம் | 06-10-2015 செவ்வாய் மாதப்பூசம் |

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

பொள்ளாச்சியில்...

# ஆண்களுக்கான இயற்கை நல யோகவாழ்வியல் பயிற்சி முகாம்



யோகாசனம் பிராணாயாமம்
தியானம் சத்சங்கம்
பக்தி மண் குளியல்
வாழையிலை குளியல்



எண்ணெய்க் குளியல்
சத்துள்ள இயற்கை உணவு



போன்ற பேரின்ப நிகழ்வுகளில்
மூழ்கித் திளைத்திட ஓர் அரிய வாய்ப்பு

**நாள்:** ஜூன் 26, 27 & 28 வெள்ளி, சனி, ஞாயிறு
[மூன்று நாட்கள் முழுவதும்]

**இடம்:** வள்ளலார் சத்திய யோகசாலை,
பெருமாள் மலை அடிவாரம், அர்த்தநாரிபாளையம், பொள்ளாச்சி.

1. அன்பர்கள் ஜூன் 25 வியாழன் மாலை 7.00 மணிக்குள் வந்துவிட வேண்டும். அன்றைய இரவே பயிற்சி ஆரம்பித்துவிடும்.
2. யோகாசனம் செய்வதற்கும், படுப்பதற்கும் இரண்டு பெட்ஷீட் எடுத்துவரவும்.
3. 5 தேங்காய், 5 கிலோ பழங்கள், 1 கிலோ உலர்ந்த (பேரிச்சம், உலர் திராட்சை) பழங்கள், 1/2 லி தேன், 1/2 கிலோ நாட்டுச் சர்க்கரை போன்றவை வாங்கி வரவும்.

அனுமதி
ஆண்களுக்கு
மட்டுமே

உங்கள் ஆரோக்கியத்திற்கான
முதலீடு ரூ. 1000/-

முன்பதிவிற்கு: 9443489849, 9942776351

பொள்ளாச்சி – அர்த்தநாரிபாளையம் மற்றும்
உடுமலை – அர்த்தநாரிபாளையம் பஸ் வசதி உண்டு.